அசல்

12.4.35. தி. சதாசிவஐயர்.

அசல் — 1 நகல் — 1

12.4.35
Kandy

உ
சிவமயம்.

no. 72
Trincomalie Street
கண்டி. 12.4.35

Copied

12

மகாகனம் பொருந்திய அன்புருவாகிய ஐயா
அவர்கள் சமுகத்துக்கு யாழ். சி. சதாசிவஐயர் பண்
முறை பணிந்து ஸாதரம் ஸவிநயமாக எழுதி
க்கொள்ளும் விஞ்ஞாபனம்: தங்களுடைய
அன்பார்ந்த கடிதம் வரப்பெற்றேன். இத்துணை
ச் சிரமங்கள் முயற்சிகளினிடையே அவகாசங்
கண்டு என்னையும் பொருட்படுத்தி அன்புமய
மான ஒரு கடிதம் எழுதிய அருமையை எண்
ணி மனம் உருகாநின்றது. தாங்கள் இன்னும்
அநேக ஆண்டுகள் தேக நலன் குன்றாதிருந்து
தமிழ் நாட்டை அணி பெறச் செய்ய வேண்
டுமென இறைவனருளைப் பிரார்த்திக்கின்றேன்.

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்தி
ச் சங்கத்து இவ்வாண்டுப் பண்டித பரீட்சையில்
III இலக்கிய பாடத்தைப் பரிசோதித்து உதவிய
பெருநன்றியைப் போற்றுகின்றேன். தங்களுக்கு
அனுப்பப்பட்ட புள்ளிவிவரங்களும் விடைப்
பத்திரங்களும் வந்து சேர்ந்தன.

யான் இப்போது எனது உத்தியோக
ஸ்தானம் மாற்றப்பட்டு இங்கு கண்டியில்
வந்து வசிக்கிறேன். இப்போது யாழ்ப்பாணத்தில்
இல்லை. இதற்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில்
200 மைல் தூரம் - இது இலங்கையின் நடுநாடு
குன்றநகரம் - பழைய அரசர்களுடைய ராஜதானி
யாயிருந்தது.

அசல்

12.4.35. தி. சதாசிவஐயர்.

அசல் – 1 நகல் – 1

இப்போதும் மிக்க சிறப்போடு விளங்குகிறது.

இவ்வளவு தெரியவிருப்பதால்
யா-ஆ-தி.பா. சங்க காரியதரிசிவே
லை இன்றைக்கு யாழ்ப்பாணத்திலி
ருப்பவரே பார்க்கும்படி விட்டுவிட்டே
ன் - என்னும் சங்கவிஷயத்தில்
அதனால் எனது அபிமானம் குறைவு
றாது. தாங்கள் எனக்கு எழுதுங்
கடிதங்களை இக்கடிதத்தின் பிற்
கண்டுள்ள விலாசத்துக்கு எழுதும்
படி வேண்டுகின்றேன்.

யாழ் - ஆ. தி. பா. சங்கத்துக்காக
யான் ஆராய்ந்து பதிப்பித்து வெளிப்படுத்
தியுள்ள "கரவை வேலன்கோவை"
என்னும் புத்தகத்தின் பிரதியொன்று
இன்றைய தபாலில் அனுப்பியிருக்கி
றேன் - கண்டுகந்து பெற்றுக்கொள்க.
தங்கள் ஆசிமொழியை விழையும்,

அன்பன்

நலமுண்டாகும். தி.சதாசிவையர்

நகல்



சிவமயம்

12-4-35,
Kandy.
No. 72. Trincomalai St.
கண்டி. ~~12~~

மகா கனம் பொருந்திய அன்புருவாகிய ஐயா அவர்கள் சமுகத்துக்கு யாழ். தி. சதாசிவ ஐயர் பன்முறை பணிந்து ஸாதரம் ஸவிநயமாக எழுதிக்கொள்ளும் விஞ்ஞாபனம்: தங்களுடைய அன்பார்ந்த கடிதம் வரப்பெற்றேன். இத்துணைச் சிரமங்கள் முயற்சிகளினிடையே அவகாசங்கண்டு என்னையும் பொருட்படுத்தி அன்புமயமான பெருங்கடிதம் எழுதிய அருமையை எண்ணி மனம் உருகாநின்றது. தாங்கள் இன்னும் அனேக ஆண்டுகள் தேக நலம் குன்றாதிருந்து தமிழ் நாட்டை அணிபெறச் செய்ய வேண்டுமென இறைவனருளைப் பிரார்த்திக்கின்றேன்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்து இவ்வாண்டுப் பண்டித பரீக்ஷையில் III இலக்கிய பாடத்தைப் பரீக்ஷித்து உதவிய பெருநன்றியைப் போற்றுகின்றேன். தங்களால் அனுப்பப்பட்ட புள்ளி விவரங்களும் விடைப் பத்திரங்களும் வந்து சேர்ந்தன.

யான் இப்போது எனது உத்தியோகஸ்தானம் மாற்றப்பட்டு இங்கு கண்டியில் வந்து வசிக்கிறேன். இப்போது யாழ்ப்பாணத்தில் இல்லை. இதற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் 200 மைல் தூரம். இது, இலங்கையின் நடு நாட்டிலுள்ள நகரம். பழைய அரசர்களுடைய ராஜதானியாயிருந்தது. இப்போதும் மிக்க சிறப்போடு விளங்குவது. இவ்வளவு தொலையில் இருப்பதால் யா. ஆ. தி. பா. சங்கக் காரியதரிசி வேலையை இன்னொருவர், யாழ்ப்பாணத்திலிருப்பவரே பார்க்கும்படி விட்டுவிட்டேன். எனினும் ~~அதனுடன்~~ சங்கவிஷயத்தில் அதன் எனது அபிமானங் குறைவுறாது. தாங்கள் எனக்கு எழுதுங் கடிதங்களை இக்கடிதத் தலைப்பிற் கண்டுள்ள விலாசத்துக்கு எழுதும்படி வேண்டுகின்றேன்.

யாழ் - ஆ. தி. பா. சங்கத்துக்காக யான் ஆராய்ந்து பதிப்பித்து வெளிப்படுத்தியுள்ள "கரவை வேலன் கோவை" என்னும் புத்தகத்தின் பிரதியொன்று இன்றைய தபாலில் அனுப்பியிருக்கிறேன். தயை கூர்ந்து பெற்

ருக் கொள்க. தங்கள் ஆசிமொழியை விழையும்,

அன்பன்,

நஜ்ஜூராம்.                தி. சதாசிவ ஐயர்.

நகல்

23

33

கண்டி
திரு சதாசிவ ஐயர் அவர்கள்.
12-4-35.

வரி.35. பக்கு 2.

ஸ்ரீ.

Page. 393 to 395.

12

[illegible]

74